


## தீபன்

# காலம் எழுதிய வரிகள்



# செல்வராஜா தீபன்

யாழ்.பல்கலைக்கழக இறுதிவருட முகாமைத்துவ மாணவன்

அன்னை மடியில்: 30-12-1979 இறைவனடியில்: 11-01-2005

## திதி வெண்பா

நிகழ் தாரண வருடம் நிறை மார்கழித் திங்கள்
திகழ் உத்திராடத் திருநாளில் — புகழ்பூத்த
செல்வராசத் தம்பதியர் திருமகனார் நல் தீபன் நல்லிறைவன்
தாழடைந்த நாள்

# செல்வராஜா தீபன்

ஈழத்திலுள்ள திருத்தலங்களுள் நகுலேஸ்வரமும் ஒன்றாகும். இத் திருத்தலம் கீரிமலை எனும் பழம் பெரும் பதியில் அமைந்துள்ளது. இப்பதி தொன்மைமிக்கது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று கீர்த்திகளையும் கொண்டதென அறிஞர் போற்றுவர்.

தொன்மைமிக்க இத்திருப்பதியில் சிறந்த பண்பாளராக இல்லறம் நடத்தி வந்த வேலுப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியினருக்கு குழந்தைச் செல்வங்களாக நாகராஜா, செல்வராஜா என இரு புத்திரர்கள் வாய்த்தனர். புத்திரர்கள் கல்விகற்கும்வேளை தந்தையார் காலமானார். தாயாரின் அரவணைப்பில் புதல்வர்கள் இருவரும் வறுமையில் செம்மையாக வளர்ந்தனர். இளையவர் செல்வராசா கல்வி கற்றதன் பின் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரிந்து வந்தார்.

சங்கத்தில் சிறப்புடன் பணியாற்றி வருகையில் இவரது நற்குணங்களையும் பண்புகளையும் அறிந்த காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியலிங்கம் சின்னம்மா தம்பதியினர் இவரைத் தமது புதல்விகளுள் ஒருவராகிய பவானிக்குத் திருமணஞ் செய்து மகிழ்ந்தனர்.

இத்திருமணத்தின் பேறாக தீபன், கௌசல்யா, சிவதர்சனா ஆகியோரை இத்தம்பதியினர் குழந்தைச் செல்வங்களாக பெற்று மகிழ்ந்தனர்.

இவர்களுள் தீபன் தீப ஒளியாகத் திகழ்ந்து ஆரம்பத்தில் தெல்லிப்பழையிலுள்ள தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்றான். தீபனது கல்வியின் திறமையைக் கண்டு பாடசாலை ஆசிரியர்கள் வியந்தனர். தீபனது நுண் அறிவினையும் கல்வியின் வளத்தையுங்கண்டு ஏனையோர் ஆச்சரியப்பட்டனர். தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியில் தனது கல்வியை முடித்துக் கொண்ட தீபன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பிரவேசித்தார். அங்கும் தீபனின் கல்வி ஆளுமை சுடர்விட்டது.

தனது முயற்சியினாலும் ஆசிரியர்களது வழிகாட்டல்களினாலும் நன்கு பயின்ற தீபன் பரீட்சைகளில் வெற்றி வாகை சூடி பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ நெறிக்குத் தெரிவானார்.

பல்கலைக்கழகத்தில் அவர் காட்டிய நெறி ஆளுமை பல்கலைக்கழகத்தில் அவரைப் பயிற்றுவித்த ஆசிரியர்களை மகிழ்வடையச் செய்தது.

பல்கலைக்கழகத்தில் அவர் பயிலும் போதே அவர் அறியாமல் கொடிய நோயொன்று அவரைப் பற்றிக் கொண்டது. காலஞ் செல்லச செல்ல அந்நோய் மெல்ல மெல்ல அவரைத் தாக்கியது. எனினும் கலக்கமடையாது தீபன் தன் கல்வியிலேயே கவனஞ் செலுத்தினார்.

தீபனின் துணிச்சலுக்கு ஈடுகொடுக்க முடியாத அக்கொடுநோய் ஒருவெறியுடன் சிலிர்த்தெழுந்தது.

தீபன் தமிழ் நாட்டிற்குச் சிகிச்சை பெறச் சென்றார். எனினும் என்ன? முழு ஆட்சிபெற்று விட்ட அந்நோயின் தாக்கம் தீபனின் உயிரையே காவு கொள்ளத் தயாராகி விட்டது. தாய் தந்தையார் மட்டுமல்ல சுற்றத்தவர்கள், நண்பர்கள் அனைவருமே தீபனின் ஆத்மாவைக் காப்பாற்றியருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்தனர்.

11.01.2005 செவ்வாய்க்கிழமை மதியம் ஒருமணி முப்பது நிமிடமளவில் உத்திராட நட்சத்திரமாகி எல்லோர் நெஞ்சங்களிலும் தீபம் போல் நின்ற தீபன் ஜோதியாகி இறைவனின் பாதாரவிந்தங்களில் பரிபூரணம் எய்தினார்.
தீபன் அமர தீபமானார்.

அன்பர்கள் உள்ளங்களில்
தீப ஒளிபரப்பிய தீபனே!
நீ ஏன் அமர தீபமானாய்?
உன்னை நினைத்து
ஏங்கும் உள்ளங்களில்
நீ இப்பொழுதும்
தீபம் இல்லை தீபன் தான்!

## தீபன்: முற்றுப் பெறாத ஒரு கவிதை

அழுகிற போது எழுத முடியுமா?
அழுத கண்ணீரே
அழிக்கிறது எழுத்தை!

எழுதுவது எப்போது?
ஏங்கித் தவிக்கையில்
வாழ்வது இயலுமா?
வாடி உதிர்கையில்
எழுதுவதென்பது இப்போதைக்கில்லை.

துயரத்தின் ஈரம்
உலர்ந்ததா இல்லையா?
உலராமல் எப்படி
உணர்த்துவது கவிதையில்?

பேரிருளில்
மூடுண்டு கிடக்கிறேன்.
காற்றின் திசை எல்லாம் ஒப்பாரி.
தொண்டைக்குள் சிக்குண்டு போயிற்று
வார்த்தைகள்.
அச்சத்தால் உறைந்து இறுகிப் போயிற்று
விழிகள்.
பெருமலையை
என் நெஞ்சுக்குழிக்குள் திணித்த துயரை
எப்படிச் சொல்வேன்?

888 888 888

மகனை இழந்த தந்தை, அதுவும் 25 வயது மகனை இழந்த 53 வயதுத் தந்தை தனது மகனைப்பற்றி எந்த மனத்துடன் எழுத முடியும்?

இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் 1979 டிசம்பர் 30ம் திகதி.. அவன் முதன்முதலாக உலகை எட்டிப் பார்த்த போது நாங்கள் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காரிருள் விலக்கி ஒளிக்கீற்றுக்களைப் படரவிட்ட இளஞ்

சூரியனின் வருகை போன்றது அவனது வருகை. ஒளிப்பிரவாகமாய், தீபமாய், தீபனாய் அவன் வந்துதித்தான். அவனது வரவை வசந்த காலத்தின் வரவு போல நாங்கள் கொண்டாடினோம். அவனுடைய சுட்டித்தனமும் துருதுருப்பும், கேள்விமேல் கேள்வி கேட்கும் ஆர்வமும் பள்ளியில் சேர்க்கும் காலத்தை விரைவில் கொண்டு வந்து சேர்த்தது. ஆரம்பக் கல்விக்காக நாங்கள் அவனை தெல்லிப்பளையிலுள்ள தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியில் சேர்த்தோம்.

ஆரம்பக் கல்வியை அவன் பூர்த்தி செய்ததும் உயர்நிலைக்கல்விக்காய் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அவனை எடுத்துக் கொண்டது. அவன் கல்வியில் காட்டிய அக்கறையும், அதன் விளைவான அவனது பரீட்சைப் பெறுபேறுகளும் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தது. தோல்வி அவனை ஒரு போதும் தொட்டதில்லை. ஆசிரியர்களின் நேசத்துக்குரிய ஒரு மாணவனானான். மாணவர்களிடையே அதிகம் விரும்பப்படுகிற ஒரு தோழனானான்.

அவனுடைய பரீட்சைப்பெறுபேறுகளின் சிறப்பைப்பற்றி பத்திரிகைகள் எழுதின. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டபோது நாங்கள் பேருவகை அடைந்தோம். அவன் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்குத் தெரிவாகி கல்வி கற்கத் தொடங்கினான்.

எல்லோரிடமும் மிகுந்த அன்பு பாராட்டும் அவன் யாருக்கும் எதுவித துன்பமும் கொடுக்க மாட்டான். சிரித்துக் கொண்டே குறும்புகள் செய்வான். தன் உறவுகளோடு வலுவான பிணைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிறைவான நினைவு எப்போதுமே அவனிடம் குடிகொண்டிருந்தது. நட்பு, காதல், அன்பு, குறும்பு அறிவு, பொறுப்புணர்வு என அனைத்தும் கொண்ட ஒருவனாகவே அவன் வளர்ந்தான்.

இந்த வயதுக்கேயுரிய குறும்பும், குறுகுறுப்பும் இருப்பினும், இந்த வயதை ஒத்தவர்களுக்கு இல்லாத பொறுப்புணர்வும், நிதானமும் அவனிடம் குடிகொண்டிருந்தது. எந்த எதிர்பார்ப்புமில்லாமலே நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் உதவிகளைச் செய்வான். ஆலோசனைகளை வழங்குவான்.


பல்கலைக்கழகத்திலும் அவனைத் தெரியாதார் என்று எவருமிலர்.

எல்லோராலும் விரும்பப்படுகிற ஒருவனாகவே அங்கும் இருந்தான். இந்தக்காலப்பகுதியில் நோயும் அவனில் நேசங்கொண்டு பற்றிப்பிடித்துக் கொண்டது போலும்.

தொண்ணூறுகளில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த எல்லாத் தந்தையரையும் போல நானும் அவனது பாதுகாப்பு குறித்து அதிகம் அஞ்சினேன். வீட்டிலிருந்து புறப்பட்டவர் வீடு திரும்பும் வரை அவரது முழுக்குடும்பமும் ஏக்கத்துடன் காத்திருக்கும் காலம் அது. வீட்டிலிருந்து புறப்பட்டவர் உயிருடன் திரும்புவார் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லாத நாட்களைக் கொண்டிருந்த காலம். சற்றுத் தாமதித்தாலும் ஜன்னல் கரையோரம் காத்திருந்து, பின் வாசலில் வந்து நின்று எட்டி எட்டிப் பார்த்து, பின்னர் அதற்கும் பொறுமை இல்லாமல் ஒழுங்கை முகப்பு வரை சென்று போவோர் வருவோரிடம் விசாரித்து.... அது உயிர் பிடுங்கிகளின் காலமாக அல்லவா இருந்தது. இந்த எனது அச்சமும் படபடப்பும் அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும். "அப்பா என்னையிட்டு நீங்கள் கவலைப்பட வேண்டாம். எந்தச்சிக்கலான பிரச்சினைக்குள்ளும் இருந்து தப்பித்துக் கொள்ளும் மதிநுட்பம் எனக்கிருக்கிறது. நீங்கள் ஏன் வீணாக கலக்கமடைகிறீர்கள் என்றான் ஒருநாள். இது எனக்கு எனக்கு தெம்பூட்டுவதாக இருந்தது. நான் அதனை நம்பினேன். நம்பிக்கை பூரணமாக இருந்தது என்றே சொல்லலாம். அவன் சொன்ன மதிநுட்பமோ எதுவோ அவன் இடையூறு எதுவுமில்லாமல் கல்வி கற்றுக் கொண்டேயிருந்தான். ஆனால் இறுதியில் காலனுடனான அவனுடைய போராட்டத்தில் அவன் எனக்குக் கொடுத்த நம்பிக்கையைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டான். அவன் தோற்ற முதல் தடவையும் இறுதித் தடவையும் அதுவாகவே போயிற்று.

"நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையில் சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் கண்ணன் இங்கிவனை
நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்"
என்ற பாடல் வரிகள் தான் எனக்குள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.


*-தந்தை-*




## நெஞ்சங்களில் நிறைந்தவன் தீபன்

தீபா!!!
உன் முகத்தில் களங்கமில்லை
உன் நெஞ்சில் களங்கமில்லை
உன் புன்சிரிப்பில் களங்கமில்லை
உன் சொல்லில் களங்கமில்லை
உன் செயலில் களங்கமில்லை
எவரிடமும் கோபமுமில்லை
களங்கமில்லா வெள்ளை உள்ளத்துடன்
எல்லோரிடமும் பாசவலை வீசிய
உன்னை காலன் கவர்ந்தது
எம்மையெல்லாம் மீளத்துயரில் ஆழ்த்தி விட்டது தீபா.
எம் நெஞ்சங்கள் உள்ளவரை உன் நினைவால் வாடிடும்

*- பெரியப்பா குடும்பம் -*


යාපනය විශ්වවිද්‍යාලය
ශ්‍රී ලංකා
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை
UNIVERSITY OF JAFFNA
SHRI LANKA


கைலாசபதி கலையரங்கம்
KAILASAPATHY AUDITORIUM


UNIVERSITY OF JAFFN

## தீபனின் நீங்காத நினைவாக ...

தீபனே உந்தன் மறைவுச் சேதி
காற்றிலே வந்து கதி கலங்க வைத்ததடா.
நீ பிரிந்து விட்டாய் என நம்ப முடியவில்லை.
ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டுப் போய்விட்டாய்.

சென்னையில் உனை நான் சந்தித்து
வாரம் இரண்டு ஆகவில்லை, அதற்குள்
பிரிந்த செய்தி அதிர்ச்சியைத் தந்ததடா.

சிரித்த முகம் கொண்டு பாசமுடன் வரவேற்றாய்,
கலந்துரையாடினாய், கருத்துப் பரிமாறினாய்,
அன்பின் திருவுருவாய் அடக்கத்தின் சின்னமாய்
மதிநுட்பம் மிக்கவனாய் மனதிலே காட்சி தந்தாய்.

உன்னுடன் பழகியது இரு நாட்கள் என்றாலும்
பல காலம் பழகிய உணர்வு தந்தாய் எந்தனுக்கு.

உன்னோடு உறவாட உள்ளத்தில் ஆசை கொண்டோம்.
காலன் செய்த சதி எம் ஆசை கைகூடவில்லை.
உன்னுடன் நாம் எடுத்த புகைப்படம் உனை
எம் கண்முன்னே நிறுத்துதடா.

துன்பமதைத் துணிவுடனே தாங்கி நின்றாய்,
பட்டப் படிப்பை முடித்துப் பார் புகழ வாழ்ந்திடுவாய்,
எத்தனை எத்தனை கனவுகள் யாம் கண்டோம்.

ஆசைக் கனவனைத்தும் கனவாகப் போனதுவே.
அதை நினைத்து நினைத்து வருந்துகிறோம்.

நீ நோயுற்ற நாள் முதலாய் உன் பாசமிகு அக்கா லதா
வருந்தாத நாள் இல்லை, வேண்டாத தெய்வம் இல்லை,
சோதிடங்கள் கேட்காத இடமில்லை.


விரைவில் நீ நலம் பெறவே வாராந்தம் ஏற்றிய
நெய் விளக்கும் பயனற்றே போனதடா.
அக்காவின் கணவர் நீ செய்த உதவிகளை
கதை கதையாய் சொல்லி வருந்தினார்.
விருப்பறிந்து உதவுவாய் நீ என பெருமையாக
கூறிக்கூறி அழுதார்.

தீபனே நீ இறுதி யாத்திரை போகையிலே
தீபன் மாமா எங்கே போகிறார் என அழுதார்கள்
உந்தன் பாசமிகு மருமக்கள் பதுமனும் மதுரனும்.
அச்சோகக் காட்சி பார்த்தோர் மனதைக் உருகவைத்ததடா.

தீபனே மென்மையான உள்ளம் படைத்தவனே,
உதவி கேட்டால் ஓடி வருபவனே,
அன்பு கொண்ட நெஞ்சங்களில் உறைபவனே,
என்றென்றும் எம் மனதில் நீ இருப்பாய்.

எம்மோடு வருத்தமுறும் உன் குடும்பத்தார்க்கு
என்றென்றும் ஆறுதலாய் இருப்போம்.
உன் ஆத்மா சாந்தி பெறட்டும்.

-ஆறுமுகசாமி குடும்பம்-
லண்டன்




## கல்லூரி நன்மாணாக்கருள் இவனுமொருவன்

தரம் ஆறில் கல்லூரியில் தடம் பதித்த செ.தீபன் 1999இல் வணிகப்பிரிவு மாணவனாக, மாணவத்தலைவனாக இருந்து, கல்லூரி நிகழ்வுகளுக்கு மாணவரோடு மாணவனாய் நின்று தோள் கொடுத்து, தன் அதீத முயற்சியால் ஆர்வத்தால் முகாமைத்துவ பீடத்திற்குத் தெரிவாகி, 3ம் ஆண்டில் கற்கை நெறியை மேற்கொண்டு எதிர்காலக் கனவுகளோடும் இலட்சியங்களோடும் பட்டம் பெற்று வெளியேற வேண்டியவேளை அகவை இருபத்தைந்தில், வெள்ளி விழாக்காணும் வயதில் காலன் கணக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையால் இன்று எம்மோடு இல்லையே என்பதை நினைத்திட நெஞ்சு நெருப்பாய் சுடுகிறது.

சி.புண்ணியசீலன்.
அதிபர்
*யா/யூனியன் கல்லூரி*
*தெல்லிப்பளை*

## தீபமாகிய தீபன்

இன்றும் என் மனதில் அதே சிரிப்பு, அதே கதை, அதே தலையாட்டல் மறக்கமுடியவில்லை, காலனை மன்னிக்க முடியவில்லை. நீ இன்று இல்லை என்பது நெருப்பாக என் மனதை சுடுகிறது.


1999 வர்த்தகப்பிரிவில் உன் வதனம் காண்கிறேன். சகபாடிகளுடனான உன் தொடர்பாடல், கற்றலில் கொண்ட ஆர்வம், அதீத முயற்சி, அசையா நம்பிக்கை உன்னையும் முகாமைத்துவ மாணவனாக பல்கலைக்கழகம் செல்ல வைத்தது. அதில் எனக்குள்ளே ஒரு பெருமிதம். பட்டம் பெற்று வெளியேறும் காலம் நெருங்கியது, ஆனாலும் வாழ வேண்டிய உன் காலத்திற்கு காலன் கணக்கு வைத்து தன் கடமையை இத்தனை விரைவில் நிறைவேற்றி விட்டான் என்பதை நம்ப மறுக்கிறது.

அனேகவேளை ஆவலோடு எதிர்காலக் கனவுகளை மனதில் சுமந்தபடி வருவாய், எல்லாம் கதைப்பாய் ஆனால் இனி?
காற்றோடு கலந்தும் அணையாத் தீபமாகி விட்டாய் என் மனதில்.

*Ms. ஜெ.செந்திவேல்,*
*99A/L Com வகுப்பாசிரியர்,*
*யா/யூனியன் கல்லூரி.*




MAHA



## தீபன் ...

எங்கு காண்போம் இனி உம்மை...
நெஞ்சு நிறைய கனவுகளுடன்
நீர் உலாவிய
விரிவுரை மண்டபம்.

நீர் ஓடித்திருந்த
படிக்கட்டுகள்,
நீர் இருந்த
கதிரை
ஏன் எமது பீடத்தில் உள்ள அத்தனையும்.... அத்தனையும்
தீபன் எங்கே?
எனக் கேட்பதாக ஒரு உணர்வு எனக்குள்

உமது வெறுமையை உணரும்போது
இங்கு எல்லோரது நெஞ்சத்தையும் இறுக்கிவிடும்
உமது பிரிவின் சோகம்.

தீபன் ...
உமது ஆஜானுபாவத் தோற்றம்
சாதிக்கத் துடிக்கும் முகபாவம்.
தெளிந்த சிந்தனை,
எதிர்காலம் பற்றிய உமது தெளிவான பார்வை
இது அத்தனையும் ...
அத்தனையும் தான்

உம்மை ஏனையவர்களில் இருந்து
பிரித்து தனியாகப் பார்க்க வைத்தது எனக்கு.

யாழ் பல்கலைக்கழகம்
ஒரு பண்பாளனை
ஒரு கல்வியாளனை
ஒரு நாட்டுப்பற்றாளனை
உருவாக்கி ஈழத்தில் இன்னுமோர்படி
உயர்ந்து நிற்கப் போவதாக எண்ணியிருந்தேன்.

ஆனால்,
பொய்யான இந்த உலகத்தில்
நிலையாமை தான்
நிலையான தென்று என
உணர மறுக்கும் எங்களுக்கு
உமது பிரிவு தந்த சோகம் தாங்க முடியவில்லை.

நீர் இந்தச் சின்ன வயதில் பிரிந்து போனாலும்,
ஒரு முற்போக்காளனாய்,
ஒரு சிந்தனைவாதியாய்,
ஒரு இலட்சியவாதியாய்,
மற்றவர்களில் இருந்து வேறாகி நிற்கும் உம்மை வணங்கி நிற்கிறேன்.
உமது ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

*திருமதி. தே.சிவாஸ்கரன்,*
*தலைவி,*
*முகாமைத்துவ பீடம்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

தீபன்!

## அவன் எங்கள் உள்ளத்தொளிரும் தீபம்

ஆயிரம் நினைவுகள்
பல்கலை தந்தது - அதில்
ஆறாத நினைவு... ... அவன்.

அவன் வந்தான்...
சூரியன் வந்தது!
அவன் போனான்.
சூனியம் வந்தது!!

அவன் தோளுக்கு மாலை
சூட வேண்டிய எம் கைகள்.
அவன் பாதங்களில் மலர்
தூவிய துர்ப்பாக்கியம் ...

பட்டப் படிப்பை
எட்டி முடிக்க
ஊன்று கோலுடன் கூட
ஓடி முயன்றவன் ...

வளர்பிறை காலத்தில்
அவனுக்கு ஏன்
அமாவாசை?...

வேளை முடிந்திருக்கலாம்...
காலன் கவர்ந்திருக்கலாம்...
ஆனாலும்,
தோழனவன் இருந்திருந்தால்
ஊருலகம் உயர்ந்திருக்கும்.
அவன் காலடிகள் மறைந்து விடலாம்...
அவனைக் காலத்திற்கும் மறக்க முடியாது.

*இறுதிவருட மாணவர்கள் (2005),*
*முகாமைக் கற்கைகள், வணிக பீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## காப்பு

தொல்லையிரும்பிறவி சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமமாகி நின்றண்ணிப் பான்தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பணியான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்துமண் நிறைந்துமிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெரும் சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச்சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலா் அருள்கந்தா்
சஷ்டி கவசம் தனை.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகெனெ
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்னகை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க

எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தறணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செயகல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி

நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)

## சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ள
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள் அமு
ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்(கு) என்று கூடும்
கொலோ? உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்

வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவிநின்று
காக்கும் கருணைக்கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சு அப்பு இதம்தரு செய்யபொற்
பாதபங் கேருகம் என்
நெஞ்சத் தடத் (து) அல ராததுஎன்
னே நெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி(சு) ஒத்து(து) இருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணுங் பொழு(து)எளி(து) எய்தநல்
காய்எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்
காய் உளங் கொண்ட தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப்பேடே
சகல கலாவல்லியே.

சொல்லிற் பனமும் அவதானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந்(து) அடிமைகொள்
வாய்நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரி(து) என்(று) ஒருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்? நிலம் நோய்புழைக்கை
நற்குஞ் சரத்தினன் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.

(சகலகலாவல்லி மாலை முற்றிற்று)



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரம்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்

தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளை
கண்ணுக் கினியானைப் பாடிக்கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய் 4.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஒலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய் 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய் 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்

ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய் 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்

சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய் 14.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொலியாய் மழையேலோ ரெம்பாவாய் 16


செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 18

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென்ஞா யிறெமக்கேலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் 20

திருச்சிற்றம்பலம்


வேலுப்பிள்ளை + சிவபாக்கியம்
நாகராஜா
+
சொர்ணாம்பாள்
கோணேஸ்வரன் + பிரியதர்சினி
கேதீஸ்வரன்
நகுலாம்பிகை + விமலச்சந்திரன்
நகுலேஸ்வரன்
செல்வராஜா
+
வைத்திலிங்கம் + சின்னம்மா
அம்புஜம்
+
கெங்காதரன்
லதாஜினி + மாதவன்
கமலன்
லோகேஸ்
பதுமன்
மதுரன்
பவானி
+
தீபன்
கௌசலா
சிவதர்ஷனா
தவராசா
+
சிவலோசனாதேவி
வைஷணா
தேவகி
+
சிவமனோகரன்
கஜமோகனா
கஜகரன்
கருணா
+
ரவீந்திரநாதன்
லம்போஜன்
பானுஜா

## நன்றி நவிலல்

எங்கள் குடும்ப தீபம் அமரர் செல்வராஜா தீபன் அவர்கள் சுகவீனமுற்றிருந்தவேளை வேண்டிய உதவிகள் செய்தோர், மற்றும் குடும்ப தீபம் அணைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியோர், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல்வேறு உதவிகள் புரிந்தோர் கண்ணீர் பிரசுரங்கள் வெளியிட்டுத் தம் ஆறாத்துயரைத் தெரிவித்த யாழ் பல்கலைக் கழக மாணவர்கள், தொலைபேசி, கடிதம் மற்றும் தந்தி மூலம் தம் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இன்றைய அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு பற்றிச் சிறப்பித்த உத்தம உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

*பெற்றோர், சகோதரர், குடும்பத்தினர்*




# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலகின் நியதியாகும்.